### எல்.பி.ஜி. விநியோகம் பெருமளவில் பாதிப்பு:

# போர்க்கால அடிப்படையில் நிலைமையை சரி செய்யவேண்டும்!

## மக்களவையில் கழக உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் பேச்சு!



புதுடெல்லி, மார்ச் 12-

எல்.பி.ஜி. விநியோகம், நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில், பெருமளவு பாதிக்கப்பட்டு வர்த்தக நிறுவனங்களும், இல்லத்தரசிகளும் பெரும் துயருக்கு உள்ளாகி உள்ளனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே ஒன்றிய அரசு போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு நிலைமையை சரி செய்ய வேண்டும் என்று மக்களவையில் வேலூர் தொகுதிகளில் டி.எம். கதிர் ஆனந்த் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக டி.எம். கதிர்ஆனந்த் பேசியதாவது:-

வணிக பயன்பாட்டு சிலிண்டர் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாட்டினால் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறு குறு உணவு உணவகங்கள்!

வணிக பயன்பாட்டுக்கான விலை உயர்வு எதிரொலியால் LPG சிலிண்டர் விநியோகம் பல இடங்களில் திடீரெனநிறுத்தப்பட்டிருப்பது கவலையளிக்கிறது.

வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் அண்டை மாவட்டங்களில் உற்பத்தி பொருளாதாரத்தை நம்பி பயணித்துவரும் மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கும் சிறு உணவகங்கள் தினசரி தேவைகளைக் கூட பூர்த்தி செய்துகொள்ள முடியாமல் திணறி வருகின்றனர். பல உணவக உரிமையாளர்கள் தங்களது கடைகளை மூடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சிலிண்டர்களை நம்பி தான் ஆயிரக்கணக்கான சிறு உணவகங்கள், டீ கடைகள், பேக்கரிகள், தள்ளுவண்டி கடைகள் போன்ற ஆயிரக்கணக்கான சிறு குறு உணவு உற்பத்திக் கூடங்கள் தினசரி இயங்கி வருகின்றன. எப்போது விநியோகம் சீராகும் என்ற தகவல் கூட நம்பகமான செய்தியாக வெளியிடப்படாத நிலையில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

ஏற்கனவே Commercial LPG விலை 115 ரூபாய் விலையேறி விண்ணை முட்டிய நிலையில், இதற்கான தட்டுப்பாடு ஏற்படும் என்பதை உணர்ந்து ஒன்றிய அரசு கையிருப்பை உறுதி செய்தும், உற்பத்தியின் அளவையும் அதிகரித்திருக்க வேண்டும்! இப்போது ஒட்டுமொத்த விநியோகமே கேள்விக்குள்ளாவது சிறு தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகளின் வாழ்வாதாரத்தையே முடக்கிவிடும்!

இது சாதாரண நிர்வாக ரீதியான தவறு அல்ல!

இது சிறு குறு தொழில்கள் மீது தம் முதலாளிகளுக்கு ஆதரவாக ஒன்றிய அரசு நேரடியாக மேற்கொள்ளும் Corporate Surgical Strike!

உள்ளூர் அளவிலும் சரி உள்நாட்டு பொருளாதார பங்களிப்பிலும் சரி மிகப் பெரிய அளவில் பங்களிக்கும் இதுபோன்ற உணவகங்கள் முடங்கிப்போவதால் பல்லாயிரக்கணக்கானோர் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது!

பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் சிறு மற்றும் நடுத்தர தொழில்கள்மீது எந்த அளவிற்கு அலட்சியமான அணுகுமுறையை ஒன்றிய அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை இது வெளிப்படையாக சுட்டிக்காட்டுகிறது.

ஒன்றிய பெட்ரோலியத் துறை அமைச்சகம் உடனடியாக விளக்கம் அளித்து, கையிருப்பு எவ்வளவு உள்ளது மற்றும் தற்போதைய தேவைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் LPG விநியோகத்தை தங்குதடையின்றி மேற்கொள்ள போர்க்கால அடிப்படையில் வழிவகை செய்ய வேண்டும்!

ஆயிரக்கணக்கானோர் நம்பியுள்ள சிறு உணவக உரிமையாளர்களின் வாழ்வாதாரம் உங்களது நிர்வாக சீர்கேட்டால் நாங்கள் அனுமதிக்க முடியாது.

ஒன்றிய அரசு உடனடியாக இவ்விவகாரத்தில் தலையிட்டு தங்கு தடையற்ற வணிக பயன்பாட்டு LPG சிலிண்டர் விநியோகத்தை குறிப்பாக தமிழ்நாடு அளவிலான சமநிலையை ஏற்படுத்த உறுதி செய்திட வேண்டும்!

இவ்வாறு அவர் பேசினார்

### சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசின் நிதி நிலுவையில் உள்ளதா?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 12-

மக்களவையில் சமக்ர சிக்ஷா (Samagra Shiksha) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ஒன்றிய அரசின் நிதி நிலுவை குறித்து தென் சென்னை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

அதன் விபரம் :

2024-25ஆம் ஆண்டிற்கான சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய ஒன்றிய நிதி நிலுவையில் உள்ளதா? கடந்த மூன்று ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட, வழங்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள நிதி விவரங்கள் என்ன?

மேலும், சுமார் ரூ.3,548 கோடி தொகை தமிழ்நாட்டிற்கு நிலுவையில் உள்ளதாக கூறப்படுவது உண்மையா? இதில் 2024-25ஆம் ஆண்டுக்கான ரூ.2,152 கோடி பங்கும் அடங்குமா? தேசிய கல்விக் கொள்கை அமல்படுத்துதல் அல்லது PM SHRI திட்டத்தில் இணைவது போன்ற நிபந்தனைகள் சமக்ர சிக்ஷா திட்ட நிதி விடுவிப்புடன் தொடர்புள்ளதா? மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பள்ளிக் கல்வி திட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதா? என்ற கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் இணை அமைச்சர் திரு.ஜெயந்த் சௌதரி அளித்த பதில்:

கல்வி என்பது இந்திய அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பட்டியலில் உள்ள துறையாகும். தேசிய கல்விக் கொள்கை 2020 நாட்டின் கல்வி அமைப்பில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டில் சமக்ர சிக்ஷா திட்டம் NEP 2020க்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டது.

PM SHRI திட்டம் 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதாகவும், NEP 2020 கூறுகளை எடுத்துக்காட்டும் மாதிரி பள்ளிகளை உருவாக்குவதே அதன் நோக்கம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தமிழ்நாடு அரசு PM SHRI திட்டத்தில் இணைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு, ஆண்டு வேலைத் திட்டம் மற்றும் பட்ஜெட் (AWP&B) ஒப்புதல், பயன்பாட்டு சான்றிதழ்கள், கணக்காய்வு அறிக்கைகள், மாநில பங்கு உள்ளிட்ட நடைமுறைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு NEP 2020ஐ முழுமையாக அமல்படுத்தவில்லை என்றாலும், மாணவர்களின் கல்வி தேவைகளை கருத்தில் கொண்டு 'RTE Entitlements' கூறின் கீழ் ஒன்றிய நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ரூ.538.39 கோடி மத்திய பங்கு தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் 2024-25ஆம் ஆண்டுக்கான ரூ.362.81 கோடியும், 2025-26ஆம் ஆண்டிற்கான முதல் மற்றும் இரண்டாம் தவணையாக ரூ.175.58 கோடியும் அடங்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட மத்திய நிதி விவ ரங்கள்: 5.3.2026 நிலவரப்படி,

2023-24: ஒதுக்கீடு ரூ.2,120.25 கோடி; விடுவிப்பு ரூ.1,871.96 கோடி.


2024-25: ஒதுக்கீடு ரூ.2,151.59 கோடி; விடுவிப்பு ரூ.362.81 கோடி (2025-26இல் விடுவிப்பு).

2025-26: ஒதுக்கீடு ரூ.1,896.42 கோடி; விடுவிப்பு ரூ.175.58 கோடி மீதமுள்ள நிதி வழக்கமான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின் விடுவிக்கப்படும் என்றும் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில்

# டிஜிட்டல் கிராமத் திட்டம் முழுமையாக செயல்படுகிறதா?

## மக்களவையில் தே. மலையரசன் கேள்வி!



கள்ளக்குறிச்சி, மார்ச் 12-

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் மக்களவையில் எழுப்பிய கேள்வி வருமாறு :-

தமிழ்நாட்டில் டிஜிட்டல் கிராமத் திட்டம் முழுமையாகச் செயல்படும் கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

அனைத்து குடி யிருப்பாளர்களுக்கும் மின்சாரம் மற்றும் டிஜிட்டல் சாதனங்களுக்கான அணுகலுடன் கூடிய ஆதித் இணைய இசைக்குழுவை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

பெண்கள் மாணவர்கள் மற்றும் விளிம்புநிலைக் குழுக்களுக்கு டிஜிட்டல் சேவைகளுக்கான அணுகலை உறுதி செய்ய ஒன்றிய அரசு சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?

இணைப்பு அல்லது வளக் கட்டுப்பாடுகளை எதிர்கொள்ளும் கிராமங்களில் டிஜிட்டல் பிளவு மற்றும் உள்கட்டமைப்பு இடைவெளிகளை நிவர்த்தி செய்ய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்

# கோவை - ஈரோடு MEMU ரயிலை சேலம் வரை நீட்டிக்கும் கோரிக்கையை நிராகரிப்பதா?

## ரயில்வே திட்டங்களில் தமிழ்நாட்டை திட்டமிட்டு புறக்கணிக்கும் ஒன்றிய அரசு – கே.இ. பிரகாஷ் எம்.பி. கண்டனம்!



புதுடெல்லி, மார்ச்.12-

கோவை ஈரோடு இடையே இயக்கப்படும் MEMU 66601/02 ரயிலை, கரூர் மற்றும் நாமக்கல் வழியாக சேலம் வரை நீட்டிக்கக் கோரும், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கை பற்றி நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அந்த கோரிக்கையை பரிசீலிப்பதற்கான சிறுநாட்டமும் இல்லாமல் உடனடியான, திமிரான நிராகரிப்பு பதிலை ஒன்றிய அரசு அளித்துள்ளது. ஈரோடு, நாமக்கல் ஆகிய இரண்டு மாவட்ட மக்களின் பல ஆண்டுகால முக்கியமான கோரிக்கையை இப்படி உதாசீனமாக அணுகியிருப்பதற்கு, என்னுடைய வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

1. ஏற்கனவே இருக்கும் எக்ஸ்பிரஸ் ரயில்களைக் காட்டி அலட்சியம்:

கோவை -ஈரோடு MEMU ரயில் சேவையைச் சேலம் வரை நீட்டிப்பது என்பது வெறும் ரயில்வே கோரிக்கை மட்டுமல்ல. இது குமாரபாளையம் நாமக்கல் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான கல்லூரி மாணவர்கள், சிறு குறு தொழிலாளர்கள் மற்றும் நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் உள்ளிட்ட ஆன்மீகத் தலங்களுக்குச் செல்லும் பக்தர்களின் மிக முக்கியமான போக்குவரத்துத் தேவை.

ஆனால், ஒன்றிய அரசு தனது பதிலில் ஏற்கனவே அந்த வழித்தடத்தில் இயங்கும் சில எக்ஸ்பிரஸ் ரயில்களைப் பட்டியலிட்டு, இந்த கோரிக்கையை நிராகரித்துள்ளது. நீண்ட தூரம் செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில்கள், சாதாரண ஏழை எளிய மக்கள் மற்றும் அன்றாடம் பயணம் செய்யும் மாணவர்களுக்கு நடைமுறையில் பெரிதாக பயன்படாது என்ற உண்மையை ஒன்றிய அரசும் ரயில்வே அமைச்சகமும் உணராமல் இருக்கின்றன.

2. ரயில்வே கட்டமைப்பு திட்டங்களில் திட்டமிட்டு புறக்கணிக்கப்படும் தமிழ்நாடு:

இந்த ஆண்டுக்கான ரயில்வே பட்ஜெட்டில் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு 20000 கோடி, 15000 கோடி என அள்ளி வழங்கிய ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு அதில் பாதியளவு கூட வராத 7000 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியது. நாட்டின் ஜிடிபிக்கு மிகமுக்கியப் பங்கை வழங்கும் தமிழ்நாட்டிற்கு இது ஏற்க முடியாத அநீதி என்று பல வல்லுநர்கள் விமர்சித்தார்கள்.

இந்த நிலையில், தற்போது ஈரோடு முதல் தமிழ்நாடெங்கும் மக்களின் தேவைக்கும் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் அவசியமான ரயில்வே கட்டமைப்பையும் உருவாக்க ஒன்றிய அரசு மறுப்பு தெரிவிக்கிறது.

ஒன்றிய அரசின் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மைக்கு எதிராகவும், தமிழ்நாட்டின் ரயில்வே உரிமைக்காகவும், நாடாளுமன்றம் மற்றும் மக்கள் மன்றத்தில் எமது குரல் தொடர்ந்து ஒலிக்கும்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### சென்னை தென்மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர்

# மூத்த வழக்கறிஞர் எம்.ராஜதுரை திருவுருவப் படம் திறப்பு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 12

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராய நகர் மேற்கு பகுதி 132 ‘அ’ வட்டக் கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் சென்னை தென் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மூத்த வழக்கறிஞர் மறைந்த எம். ராஜதுரை அவர்களின் திருஉருவ படத்திறப்பு நிகழ்ச்சியில் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே ஏழுமலை எம்.சி., கோ சு.மணி, கோடம்பாக்கம் மு.சத்யா கே.எஸ்.வெல்டிங்ராஜா, நா.மோ.முரளி, பா.கார்த்திகா பாஸ்கர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

வட்டகழக செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா அறிக்கை வருமாறு:-

சென்னை தென் மேற்கு மாவட்ட தியாகராய நகர் மேற்கு பகுதி 132 ‘அ’ வட்டக் கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் சென்னை தென் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மறைந்த மூத்த வழக்கறிஞர் எம் ராஜதுரை அவர்களின் திருஉருவ படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (12.03.2026 வியாழக்கிழமை) மாலை 7 மணி அளவில் என் 1 3 யுனைடெட்இந்தியாகாலனி அண்ணா மெயின்ரோடு கோடம்பாக்கம் முகவரியில் இருக்கும் அவர் இல்லத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி. எம்.எல்.ஏ., தியாகராயநகர் மேற்குபகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தலைமை செயற்குழு உறுப்பினர் கோசு.மணி, கோடம்பாக்கம் மு.சத்யா, தியாகராய நகர் தொகுதி பார்வையாளர் திருமதி ரத்னா லோ கேஸ்வரன் எம்.சி., வட்டக் கழக செயலாளர்கள், கே.எஸ்.வெல்டிங்ராஜா, நா.மோ.முரளி, பா.கார்த்திகா பாஸ்கர் எம்.சி. ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எனவே வட்டத்திற்குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதி கள், இளைஞர் அணி, மகளிர் அணி சுற்றுச்சூழல் அணி ,மகளிர் தொண்டர் அணி,

வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை ராணி, பொறியாளர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, தொழிலாளர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்களின் அணி, தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடி கள் அனைவரும் எனவே இந்த நிகழ்ச்சியில் தவறாமல் கலந்து கொள்ளும்படி வட்டச் செயலாளர் கே.எஸ். வெல்டிங் ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜவுளித் துறையின் திறன் மேம்பாட்டுத் திட்டம்

# திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்துவதில் மறுபரிசீலனையா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 12-

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை எழுப்பிய கேள்விகள் வருமாறு:

(அ) தமிழ்நாட்டில், குறிப்பாக கைத்தறி, பட்டு மற்றும் ஜவுளித் தொழிலாளர்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ள திருவண்ணாமலை மாவட்டங்களில், சமர்த் (ஜவுளித் துறையில் திறன் மேம்பாட்டுத் திட்டம்) செயல்படுத்தப்படுவதை அரசு மறுபரிசீலனை செய்துள்ளதா;

(ஆ) கடந்த மூன்று நிதி யாண்டுகளில் இந்த மாவட்டங்களில் சமர்த்தின் கீழ் சேர்ந்த, பயிற்சி பெற்ற மற்றும் சான்றிதழ் பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் முடிவுகள் பற்றிய விவரங்கள்; (இ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில், குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில், சமர்த்தின் பயிற்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகள் பற்றிய விவரங்கள்; மற்றும்

(ஈ) இந்தத் திட்டத்தின் கீழ், பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு சந்தை இணைப்புகளை வலுப்படுத்தவும், திறன்களை நவீனப்படுத்தவும், நிலையான வேலை வாய்ப்புகளை உறுதி செய்யவும் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் கிரிராஜ் சிங் விரிவாக பதிலளித்தார்.

### அண்ணாநகர் வடக்கு பகுதி

# தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.பாலாஜி மறைவு!

## நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் - ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் அஞ்சலி!



சென்னை, மார்ச். 12

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி தொழிலாளர் அணி துணை அமைப்பாளரும், தமிழ் வேள் டாக்டர் கலைஞர் கருணாநிதி மன்றம் துணைச் செயலாளருமான எஸ்.பாலாஜி (வயது 44) நேற்று (11.03.2026 புதன்கிழமை) மதியம் 12 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி. திருமலை மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (12.03.2026 வியாழக்கிழமை) மதியம் 3 மணியளவில் நியூ ஆவடி ரோடு, வேலங்காடு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.



கேஸ் விலை உயர்வுக்கு காரணமான ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து, தமிழ்நாடு மகிலா காங்கிரஸ் தலைவி திருமதி.அசினா சையது தலைமையில், வடசென்னை கிழக்கு மாவட்ட மகளிர் காங்கிரஸ் தலைவி திருமதி. தாரணி திரவியம் முன்னிலையில் சென்னை வண்ணாரப்பேட்டை தபால் நிலையம் அருகே பாடை கட்டி, பாடையை காங்கிரஸ் தொண்டர்கள் சாலையில் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். அப்பொழுது திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 11வது வட்ட காங்கிரஸ் தலைவர் மால கொண்டையா அவர்களும் பாடையை தூக்கிக்கொண்டு சாலையில் சென்ற போது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு மயங்கி விழுந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மால கொண்டையா அகால மரணம் அடைந்தார். பரிசோதனை முடிந்து குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட மால கொண்டையா உடலுக்கு மாநில மீனவர் அணி துணைத்தலைவர், திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் மனித நேயத்தோடு திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி ரூபாய் 1,00,000 வழங்கி அஞ்சலி செலுத்தினார்.

### மாதவரம் வடக்குப் பகுதி 15வது வட்டத்தில் – ரமலான் திருநாள்

# 250 இஸ்லாமிய பெருமக்களுக்கு நல உதவிகள்!

## புழல் எம். நாராயணன் வழங்கினார்!

மாதவரம், மார்ச்.12-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் புனித ரமலான் திருநாளை முன்னிட்டு இஸ்லாமிய பெருமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 15வது வட்டத்தில் அடங்கிய மணலி புதுநகர் பகுதியில் வசிக்கும் இஸ்லாமிய பெருமக்கள் 250 பேருக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச்.பீர்முகமது ஏற்பாட்டில், புனித ரமலான் திருநாளை முன்னிட்டு அரிசி, சர்க்கரை, நெய் சேமியா, ரவை மற்றும் புடவை ஆகியவை வழங்கப்பட்டன.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை இஸ்லாமிய பெருமக்களுக்கு வழங்கினார்.

மேலும் நலத்திட்ட உதவிகளை பெற வந்த இஸ்லாமிய பெருமக்கள், முத்தமிழறிஞர் கலைஞர் காலம் தொட்டு இஸ்லாமிய பெருமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதாக இருந்தாலும், மூன்று சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கியதை நன்றி உடன் நினைப்பதாகவும், தொடர்ந்து எங்களுடைய ஆதரவு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்குத்தான் என்று உறுதியளித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் கே.அங்குசாமி, வட்ட நிர்வாகிகள் பி.டி. ரவிச்சந்திரன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன், மாவட்ட அணி துணை அமைப்பாளர் முகமது வசீம், மாவட்ட பிரதிநிதி கே. செல்வன், வக்கீல் ஜி.டில்லி மற்றும் மசூதியின் நிர்வாகிகள் உள்ளிட்ட நான் இருக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முஸ்லிம் தாய்மார்கள் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.



கும்மிடிப்பபூண்டி ஒன்றியம் எடுர் ஊராட்சி கும்புளி கிராமத்தில் மாவட்ட துணை செயலாளர் எம்.எல்.ரவி ஏற்பாட்டில் முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம் மற்றும் நலதிட்ட உதவிகளை தலைமை செயற்குழு உறுப்பினர் கும்மிடிப்பபூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மு.மணிபாலன், கே.வி.ஜி.உமாமகேஷ்வரி, எஸ்.ரமேஷ் பா.செ.குணசேகரன், இரா.அறிவழகன் மு.கேசவன் கே.ஆறுமுகம், ரவிந்திரன், கே.வி.நாகராஜ், ஜெயா, உதயன், லாரன்ஸ், லால், இளங்கோ, மூர்த்தி, பழனி, பக்தவாசலம், விஜயகுமார், கணபதி, ராஜசேகர், வேலன், சீனிவாசன், மாரி, அமுல்ராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.